# பரீட்சகரின் அறிக்கை

## AA1 பரீட்சை – 2018 யூலை

# (AA11) நிதிக் கணக்கீட்டு அடிப்படைகள்

## பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

**வினா இல. 01** - 40 புள்ளிகள்

(கட்டாய வினா)

இவ்வினா 15 உப வினாக்களைக் கொண்டது.

இங்கு இல. **1.1** தொடக்கம் **1.8** வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அவ்விடையின் இலக்கத்தை அதன் வினா இலக்கத்துடன் விடைப்புத்தகத்தில் எழுதுமாறு தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சிலர் வினாப்பத்திரத்தில் தரப்பட்டிருந்த அறிவுறுத்தல்களைப் பின்பற்றியிருக்கவில்லை. அவர்கள் வினாப்பத்திரத்திலேயே விடைகளை குறித்து, அவ்வினாப்பத்திரத்தை விடைப்புத்தகத்துடன் இணைந்திருந்தனர். வேறு சில பரீட்சார்த்திகள் தெரிவுசெய்யப்பட்ட விடையின் இலக்கத்தை எழுதுவதற்குப் பதிலாக முழு விடையையும் விடைப்புத்தகத்தில் எழுதியிருந்தனர். இது தேவையற்ற விதத்தில் நேரத்தை வீணடித்த செயலாகும்.

மேலும், சில பரீட்சார்த்திகள் இல. **1.9** தொடக்கம் **1.15** வரையான வினாக்களுக்குரிய விடைகளை விடைப்புத்தகத்தில் எழுதியிருந்தனராயினும் **1.1** தொடக்கம் **1.8** வரையான வினாக்களுக்குரிய விடைகளை அதில் குறிப்பிட்டிருக்கவில்லை. இது விடைப்புத்தகத்துடன் விடைகளை இணைத்திராமையினாலோ அல்லது வினாப்பத்திரத்திலேயே விடைகளைக் குறித்திருந்து அதனை விடைப்புத்தகத்துடன் இணைத்திராமையாலோ ஏற்பட்டிருக்கலாம். எனவே, பரீட்சார்த்திகள் இலகுவாக பெற்றிருக்கக்கூடிய இந்த வினாக்களுக்கான புள்ளிகளை அவர்களால் பெறமுடியவில்லை

இந்த உபவினாக்களுக்கான விடையளிப்பில் அடையாளம் காணப்பட்ட பொதுவான வழுக்கள் / பலவீனங்கள் கீழே தரப்படுகின்றன :

**வினா இல. 1.2**

சில பரீட்சார்த்திகளின் மூல ஆவணங்கள் தொடர்பான அறிவு குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இவ்வினாவுக்கான சரியான விடை இல. (03) இல் வழங்கப்பட்ட பொருட்கள் பெறுகைச் சீட்டு (GRN) என்பதாகும். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் பொருட்கள் கோரும் சீட்டு (MRN) என்ற பிழையான விடையினைத் தெரிவுசெய்திருந்தனர்.

**வினா இல. 1.3**

சில பரீட்சார்த்திகள் கணக்கீட்டுக் கோட்பாடுகள் தொடர்பில் போதியளவு அறிவினைக் கொண்டிருக்கவில்லை என்பதைக் காணக்கூடியதாக இருந்தது. உரிமக் கோட்பாடு என்பது சரியான விடையாக இருந்த போதிலும் சில பரீட்சார்த்திகள் கொள்கை மாறாக் கோட்பாடு என்பதைத் தெரிவுசெய்திருந்தனர்.

**வினா இல. 1.5**

பரீட்சார்த்திகள் பாரம்பரிய முறையின்கீழ் கணக்குகளை வகைப்படுத்துதல் தொடர்பான சரியான அறிவினைக் கொண்டிருக்கவில்லை என்பது அவர்கள் அளித்திருந்த விடைகளிலிருந்து

தெரிந்துகொள்ள முடிகிறது. அதிகளவான பரீட்சார்த்திகள் மெய்க் கணக்கு ஒன்றிற்கான சரியான உதாரணமாக எந்திரக் கணக்கினை அடையாளங் காணத் தவறியிருந்தனர்.

**வினா இல. 1.6**

நேர்கோட்டு முறையில் தேய்மானத்தைக் கணிப்பிட்டிருந்த சில பரீட்சார்த்திகளால் சரியான விடையினை எழுதுவதற்கு முடியாமற் போயிருந்தது. இது குறைந்து செல்லும் மீதி முறை பற்றிய அறிவு காணப்படாததாலும் நேர்கோட்டு முறையில் தேய்மானத்தைக் கணிப்பிட்டதன் மூலம் பிழையான விடையினை வழங்கியதனாலும் ஏற்பட்ட ஒன்றாகும்.

**வினா இல. 1.9**

பரிப்புக்கள் பற்றிய ஓரளவு அறிவினைக் கொண்டிருந்த போதிலும் அவர்களில் சிலருக்கு வரைவிலக்கணத்தைத் துல்லியமாகவும் சரியாகவும் வழங்குவதற்கு முடியாமற் போயிருந்தது.

**வினா இல. 1.11**

இவ்வினாவுக்கான சரியான விடையினைப் பெறுவதற்கு பரீட்சார்த்திகள் பல்வேறு முறைகளைப் பயன்படுத்தியிருந்தனர். மொத்தச் சொத்துக்களின் பெறுமதி ரூ.1,075,000/- ஆக இருந்தபோதிலும் சில பரீட்சார்த்திகள் ஆண்டிற்கான பரிப்புக்களையும் இலாபத்தையும் கூட்டி எடுப்பனவுகளைக் கழித்திருந்ததன் மூலம் பிழையான விடையான ரூ.575,000/- இனைக் கணித்திருந்தனர். இங்கு வினாவில் மொத்தச் சொத்துக்களின் பெறுமதியைக் கணிப்பிடுவதே எதிர்பார்க்கப்பட்டது என்பதைப் பரீட்சார்த்திகள் விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

**வினா இல. 1.12**

கணக்கீட்டுக் கோட்பாடுகள் தொடர்பான அறிவு குறைவாக இருந்தமையால் சில பரீட்சார்த்திகள் பிழையான விடைகளை அளித்திருந்தனர் :

(a) சரியான விடை தொடர்ந்தியங்கும் கோட்பாடாக இருந்த போதிலும் சில பரீட்சார்த்திகள் பிழையாக கொள்கை மாறாக் கோட்பாட்டினை அடையாளங் கண்டிருந்தனர்.

(b) சரியான விடை அட்டுறுக் கோட்பாடாக இருந்தது. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் அதனை தேறுகைக் கோட்பாடாக அடையாளங் கண்டிருந்தனர்.

(c) சரியான விடை கொள்கை மாறாக் கோட்பாடாக இருந்தபோதிலும் சில பரீட்சார்த்திகள் விடையாக உரிமக் கோட்பாட்டினை அடையாளங் கண்டிருந்தனர். வேறு சில பரீட்சார்த்திகள் விடையாக தொடர்ந்தியங்கும் கோட்பாட்டினை அடையாளங் கண்டிருந்தனர்.

**வினா இல. 1.15**

இங்கு தரப்பட்டிருந்த ஒவ்வொரு ஊடுசெயலுக்குமான சரியான இரட்டைப் பதிவுகளை எழுதுவது எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் விடையாக பேரேட்டுக் கணக்குகளை எழுதியிருந்தனர்.

## <u>பகுதி B</u>

**வினா இல. 02** - 10 புள்ளிகள்

(கட்டாய வினா)

இவ்வினா உற்பத்திக் கணக்கைத் தயாரிப்பது தொடர்பான அறிவைப் பரீட்சிப்பதற்காக வழங்கப்பட்டிருந்தது.

விடைகளை மதிப்பீடு செய்யும்போது கண்டுபிடிக்கப்பட்ட சில வழுக்கள் மற்றும் பலவீனங்கள் பின்வருமாறு :

(1) சில பரீட்சார்த்திகள் உற்பத்திக் கணக்கைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்த வேண்டிய வடிவம் பற்றிய சரியான அறிவினைக் கொண்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(2) சில பரீட்சார்த்திகள் நேர் மற்றும் நேரில் செலவுகளை சரியாக அடையாளங் காண முடியாமையால் அவற்றை அவர்கள் இடமாற்றிக் குறிப்பிட்டிருந்தனர்.

(3) புத்துருவாகும் வேலைகள் முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டுள்ளன என வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதனைக் கருத்திற்கொள்ளாத சில பரீட்சார்த்திகள் அவற்றை முதன்மைக் கிரயத்தின் கீழ் குறிப்பிடுவதற்குப் பதிலாக மேந்தலைக் கிரயங்களின் கீழ் உற்பத்திக் கணக்கின் இறுதியில் குறிப்பிட்டிருந்தனர்.

(4) சில பரீட்சார்த்திகள் பிழையாக உற்பத்திக் கணக்கில் இறுதிப் புத்துருவாகும் வேலைகளை கூட்டியிருந்தாதுடன் ஆரம்பப் புத்துருவாகும் வேலைகளைக் கழித்துமிருந்தனர்.

(5) குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகள் தொழிற்சாலைப் பணியாளர்களுக்குச் செலுத்தப்பட்ட மேலதிகப் படியினை பிழையாக உரிமைத் தொகைகளாக அல்லது காப்புரிமைகளாகக் குறிப்பிட்டிருந்தனர். இந்தத் தொகையினை முதன்மைக் கிரயத்தின் கீழ் குறிப்பிடுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டிருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் இதனை மேந்தலைக் கிரயங்களின் கீழ்க் குறிப்பிட்டிருந்தனர்.

(6) இங்கு மேந்தலைக் கிரயங்களின் கீழ் நேரில் கிரயமொன்றாக உற்பத்தி முகாமையாளரின் சம்பளத்தைக் குறிப்பிடுமாறு தேவைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் சில பரீட்சார்த்திகள் அதனை முதன்மைக் கிரயத்தின் கீழ் ஒரு நேர் கிரயமாகக் குறிப்பிட்டிருந்தனர்.

(7) தொழிற்சாலை மற்றும் அலுவலகத்திற்கிடையே முறையே 80 % மற்றும் 20 % ஆக கட்டடத்துடன் தொடர்புடைய செலவுகளை ஒதுக்கீடு செய்வதற்குத் தேவைப்படுத்தப்பட்டிருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் இக்கணிப்பீட்டினைச் சரியாகச் செய்யாது தவறான விடைகளை எழுதியிருந்தனர்.

**வினா இல. 03** - 10 புள்ளிகள்

(கட்டாய வினா)

இவ்வினா ஐந்தொகையைத் தயாரிப்பது தொடர்பான அறிவைப் பரீட்சிப்பதற்காக வழங்கப் பட்டிருந்தது. பரீட்சார்த்திகளின் ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான ஒரு மட்டத்தில் காணப்பட்டது.

விடைகளை மதிப்பீடு செய்யும்போது அடையாளங் காணப்பட்ட வழுக்கள் மற்றும் பலவீனங்கள் பின்வருமாறு :

(1) ஐந்தொகை மீதான அடிப்படை அறிவைக் கொண்டிருக்காத சில பரீட்சார்த்திகள் இதனை நிதி நிலைமைக் கூற்றாக அல்லது வருமானக் கூற்றாகத் தயாரித்திருந்தனர்.

(2) இங்கு வியாபார வருமதியாளர் மற்றும் வியாபார சென்மதியாளர் கணக்குகளைத் தயாரிப்பதன் மூலம் விற்பனைகள் மற்றும் கொள்வனவுகளைக் கண்டுபிடிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்டது. சில பரீட்சார்த்திகளிடம் வியாபார வருமதியாளர் மற்றும் வியாபார சென்மதியாளர் கணக்குகளைத் தயாரிப்பது தொடர்பான சரியான அறிவு காணப்படாததால் தவறான பெறுமதிகளைக் குறிப்பிட்டிருந்தனர்.

(3) செம்மையாக்கங்கள் சரியாகச் செய்யப்படாததால் மின்சாரம் மற்றும் கூலிகளுக்கான அட்டுறுக்கள் சரியாகக் குறிப்பிடப்படவில்லை. ஏனைய சில அட்டுறுச் செலவுகள் இந்த ஐந்தொகையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் அட்டுறு செலவுகளை ஐந்தொகையில் குறிப்பிட்டிருந்த போதிலும் சம்பந்தப்பட்ட செலவுகளுக்கான செம்மையாக்கங் களைச் செய்திருக்கவில்லை.

(4) காசு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட வாகனக் கொள்வனவானது சில பரீட்சார்த்திகளால் பிழையாக மூலதனத்துடன் கூட்டப்பட்டிருந்தது.

(5) கொள்வனவுத் திகதியை அடிப்படையாகக் கொண்டு ஆறு மாதங்களுக்கு வாகனத்தைத் தேய்மானஞ் செய்யத் தேவைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் சில பரீட்சார்த்திகள் முழு ஆண்டிற்காகவும் தேய்மானஞ் செய்திருந்தனர்.

இறுதிக் காசு மீதியினைப் பெறுவதற்காகக் காசேட்டைத் தயாரிப்பதற்கு தேவைப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் இதனைத் தயாரிக்காது தவறான விடைகளைப் பெற்றிருந்தனர்.

**வினா இல. 04** - 10 புள்ளிகள்
(கட்டாய வினா)

இவ்வினா இரு உப பகுதிகளான **(a)** மற்றும் **(b)** யினைக் கொண்டிருந்தது. வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளை தயாரிப்பதை **பகுதி (a)** பரீட்சித்திருந்த அதே வேளை செம்மையாக்கப்பட்ட இலாப / நட்டத்தைக் கணிப்பிடுவதைப் **பகுதி (b)** பரீட்சித்திருந்தது.

விடைகளை மதிப்பீடு செய்யும்போது அடையாளங் காணப்பட்ட வழுக்கள் மற்றும் பலவீனங்கள் பின்வருமாறு :

**(a) நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தயாரித்தல் :**

(1) பரீட்சார்த்திகள் சிலரிடம் வழுக்களைத் திருத்துவதற்கு பயன்படுத்த வேண்டிய நாட்குறிப்பேட்டுப் பதிவுகள் தொடர்பான அடிப்படை அறிவு காணப்படவில்லை என்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

(2) வினாவைச் சரியாக வாசித்து விளங்கிக்கொள்ளாத சில பரீட்சார்த்திகள் நாட்குறிப் பேட்டுப் பதிவுகளுக்குப் பதிலாக பேரேட்டுக் கணக்குகளைத் தயாரித்திருந்தனர்.

(3) ஒவ்வொரு நாட்குறிப்பேட்டுப் பதிவின் முடிவிலும் எடுத்துரைப்பினை வழங்குவதற்கு தேவைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் சில பரீட்சார்த்திகள் நாட்குறிப்பேட்டுப் பதிவுகளை மாத்திரமே வழங்கியிருந்தனர்.

(4) சில பரீட்சார்த்திகள் மடிக்கணினியொன்றின் ரூ. 350,000/- [நாட்குறிப்பேட்டு இல. (4)] பெறுமதியான கொள்வனவை நிலையான சொத்தொன்றின் கொள்வனவாக அடையாளங் கண்டிருக்கவில்லை. கொள்வனவுக் கணக்கில் இது தவறாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(5) அதிகளவான பரீட்சார்த்திகள் வாடகை வருமானத்தை வாடகைச் செலவுக் கணக்கிற்கு வரவு வைப்பது பற்றிய வழுத் திருத்தம் தொடர்பான நாட்குறிப்பேட்டுப் பதிவு (5) இற்கு தவறான விடைகளை அளித்திருந்தனர். அவர்களில் சிலர் தொங்கல் கணக்கிற்கு செய்யப்பட்ட பதிவினை வரவுப் பதிவாகக் குறிப்பிடுவதற்குப் பதிலாக செலவுப் பதிவாகக் குறிப்பிட்டிருந்தனர். சிலர் வாடகை வருமானம் மற்றும் வாடகைச் செலவுகளை செலவுப் பதிவு செய்யத் தேவைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றை அவர்கள் வரவுப் பதிவு செய்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் நாட்குறிப்பேட்டுப் பதிவுகள் தொடர்பில் எண்கணித வழுக்களைக்கூட விட்டிருந்தனர்.

**(b) செம்மையாக்கப்பட்ட இலாபம் / (நட்டம்) இன் கணிப்பீடு :**

(1) பல பரீட்சார்த்திகள் இது தொடர்பில் குறைந்த அறிவினையே கொண்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் இதற்காக தொங்கற் கணக்கினைத் தயாரித்திருந்தனர்.

(2) பல பரீட்சார்த்திகள் வரைவு நிதிக் கூற்றுக்களின்படி, இலாபத்திலிருந்து கழிக்கப்பட வேண்டிய உருப்படிகளை இலாபத்துடன் கூட்டியும் இலாபத்துடன் கூட்ட வேண்டிய உருப்படிகளை இலாபத்திலிருந்து கழித்தும் எழுதியிருந்ததினால் அவர்களால் சரியான செம்மையாக்கப்பட்ட இலாபத்தை அல்லது (நட்டத்தை) கணிப்பிடுவதற்கு இயலாமற் போயிருந்தது.

(3) சில பரீட்சார்த்திகள் வரைவு நிதிக் கூற்றுக்களின்படி தரப்பட்ட இலாபத்தைப் பற்றிக் கருத்திலெடுக்காது, செம்மையாக்கப்பட்ட இலாபமாக வழுக்களைத் திருத்துவது தொடர்பான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளின் வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையிலான வேறுபாட்டை எடுத்திருந்தனர்.

(4) சில பரீட்சார்த்திகள் செம்மையாக்கப்பட்ட இலாபம் அல்லது நட்டத்தைக் கணிப்பிடு வதற்குப் பயன்படுத்தப்பட வேண்டிய வடிவமைப்பு பற்றிய சரியான விளக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை.

**வினா இல. 05** - 10 புள்ளிகள்
(கட்டாய வினா)

இவ்வினா **(a), (b)** என்னும் இரு உப பகுதிகளைக் கொண்டது. கணக்கீட்டுச் சமன்பாடு தொடர்பான விளக்கம் உப பகுதி **(a)** இல் பரீட்சிக்கப்பட்ட அதே வேளை கொள்வனவு நாட்குறிப்பேடு (கொள்வனவு நாளேடு) மற்றும் வெளித்திரும்பல் நாட்குறிப்பேடு (கொள்வனவுத் திரும்பல் நாளேடு) ஆகியவற்றைத் தயாரிப்பது தொடர்பான அறிவு உப பகுதி **(b)** இல் பரீட்சிக்கப்பட்டது.

அளிக்கப்பட்ட விடைகளின் அடிப்படையில் அடையாளங் காணப்பட்ட சில பொதுவான தவறுகள் பின்வருமாறு :

**(a) கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான தாக்கம்:**

(1) கணக்கீட்டுச் சமன்பாடு தொடர்பில் அடிப்படை அறிவைக் கொண்டிருக்காத சில பரீட்சார்த்திகள், குறித்த ஊடுசெயல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தைச் சரியாகச் சமர்ப்பித்திருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் கடன் விற்பனை ஊடுசெயல் ஒன்றின் இலாபத்தைக் கணிப்பிடுவது பற்றி சரியான விளக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை.

(2) சில பரீட்சார்த்திகள் பெறுமதிகளைச் சமர்ப்பிக்கும்போது “+” அல்லது “-” குறிகள் தொடர்பில் குறிப்பிட்டிருக்கவில்லை.

**(b) கொள்வனவு நாட்குறிப்பேடு மற்றும் வெளித்திரும்பல் நாட்குறிப்பேட்டைத் தயாரித்தல் :**

(1) சில பரீட்சார்த்திகள் கொள்வனவு நாட்குறிப்பேடு மற்றும் வெளித்திரும்பல் நாட்குறிப்பேடு ஆகியவற்றைத் தயாரிப்பதற்குப் பொருத்தமான வடிவமைப்பு பற்றிய அடிப்படை அறிவைக் கொண்டிருக்கவில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

(2) சில பரீட்சார்த்திகள் கொள்வனவு நாட்குறிப்பேடு மற்றும் வெளித்திரும்பல் நாட்குறிப்பேடு ஆகிய இரண்டிற்கும் ஒரே வடிவமைப்பையே பயன்படுத்தியிருந்தனர்.

(3) சில பரீட்சார்த்திகள் அளவு மற்றும் கிலோகிராம் ஒன்றின் விலை ஆகியவற்றைக் குறிப்பிட்டிருந்தனராயினும் பொருத்தமான நாட்குறிப்பேட்டில் மொத்தப் பெறுமதியைக் குறிப்பிட்டிருக்கவில்லை. மறுபுறத்தில், சில பரீட்சார்த்திகள் மொத்தப் பெறுமதியை மாத்திரம் குறிப்பிட்டிருந்ததுடன் அவர்கள் அளவு மற்றும் கிலோகிராம் ஒன்றின் விலை ஆகியவற்றைக் குறிப்பிட்டிருக்கவில்லை.

(4) குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் வெளித்திரும்பல்களின் பெறுமதியைக் கணிப்பிடு வதற்குத் தவறியிருந்தனர்.

## பகுதி C

**வினா இல. 06** - 20 புள்ளிகள்

(கட்டாய வினா)

இவ்வினா பகுதி **(a)**, பகுதி **(b)** என 2 பகுதிகளைக் கொண்டது. பகுதி **(a)** ஆனது முற்றடக்க வருமானக் கூற்றைத் தயாரிப்பதையும் பகுதி **(b)** நிதி நிலைமைக் கூற்றைத் தயாரிப்பதையும் பரீட்சித்திருந்தது.

அளிக்கப்பட்ட விடைகளிலிருந்து அவதானிக்கப்பட்ட சில பொதுவான தவறுகள் கீழே தரப்படுகின்றன:

**(a) முற்றடக்க வருமானக் கூற்றைத் தயாரித்தல்:**

(1) சில பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய விற்பனைப் பணிசைக்கான செம்மையாக் கத்தைச் செய்திருக்கவில்லை. விற்பனைப் பணிசையை முற்றடக்க வருமானக் கூற்றில் ஓர் செலவாகச் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் சிலர் அதனை ஓர் வருமானமாகச் சமர்ப்பித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் மேலதிகப்பற்று மீதான வட்டியினை வருமானம் ஒன்றாக மறைமுகமாக அடையாளங் கண்டிருந்தனர்.

(2) நிதி நிலைக் கூற்றில் குறிப்பிடப்பட வேண்டிய சில உருப்படிகள் முற்றடக்க வருமானக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(3) பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாக் கடன்களை முற்றடக்க வருமானக் கூற்றில் ஓர் செலவாகக் குறிப்பிட வேண்டியிருந்த போதிலும் சில பரீட்சார்த்திகள் அதனை செய்திருக்கவில்லை.

(4) ஐயக்கடன்களுக்கான 10% பொதுவான ஏற்பாடானது அறவிடமுடியாக் கடன் ரூ.30,000/- இற்கான செம்மையாக்கப்பட்ட வியாபார வருமதியாகவுள்ள மீதித் தொகைக்கே செய்யப்பட வேண்டும் என்றபோதிலும் சிலர் அதனைப் புறக்கணித்து வியாபார வருமதி யாகவுள்ள மொத்தப் பெறுமதி மீதும் ஐயக்கடன்களுக்கான ஏற்பாட்டைச் செய்திருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் இதனை ஏற்பாட்டின் கீழான ஓர் ஐயக்கடனாக அடையாளங் கண்டிருக்கவில்லை.

(5) சில பரீட்சார்த்திகள் ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்த திரண்ட தேய்மானத்தை காலப்பகுதிக்குரிய தேய்மானமாகக் குறிப்பிட்டிருந்தனர்.

(6) சில பரீட்சார்த்திகள் முற்பணமாகச் செலுத்தப்பட்ட காட்சியறைக் கட்டட வாடகையை சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை. அவர்கள் செலுத்தப்பட்ட முழு வாடகையையும் ஓர் செலவாகக் குறிப்பிட்டிருந்தனர்.

(7) ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டிருந்த பெறுமானங்கள் ஆயிரங்களில் (‘000) வழங்கப் பட்டிருந்ததுடன் மேலதிக தகவல்களில் குறிப்பிடப்பட்டிருந்த பெறுமானங்கள் அதே பெறுமானங்களிலேயே குறிப்பிடப்பட்டிருந்தன. சில பரீட்சார்த்திகள் இவற்றைக்

கருத்திற்கொள்ளவில்லை என்பதுடன் மேலதிக தகவல்களில் காணப்பட்ட மெய்ப் பெறுமானங்களை ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்த பெறுமானங்களைப் போன்று செம்மையாக்கம் செய்திருந்தனர்.

(8) சில பரீட்சார்த்திகள் முற்றடக்க வருமானக் கூற்றைச் சமர்ப்பிப்பதற்குப் பயன்படுத்தப்படும் வடிவமைப்பை (வரவு, செலவு நிரல்களைக் குறிப்பிட்டு) ஐந்தொகையைச் சமர்ப்பிப்தற்குப் பயன்படுத்தியிருந்தனர்.

**(b) நிதி நிலைமைக் கூற்றைத் தயாரித்தல் :**

(1) முற்றடக்க வருமானக் கூற்றில் குறிப்பிடப்பட வேண்டிய சில உருப்படிகள் நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

(2) குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகள் முற்பணமாகச் செலுத்தப்பட்ட காட்சியறை கட்டட வாடகை மற்றும் செலுத்த வேண்டிய விற்பனைப் பணிசை ஆகியவற்றை நிதி நிலைமைக் கூற்றில் சரியாகச் சமர்ப்பிக்கவில்லை.

(3) அறவிடமுடியாக் கடன் பதிவழிப்பு மற்றும் ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு ஆகியன சரியாகச் செம்மையாக்கம் செய்யப்படவில்லை என்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

(4) சில பரீட்சார்த்திகள் திரண்ட தேய்மானத்தையும் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் முன்கொணரற் பெறுமதியினையும் சரியாகக் கணிப்பிடத் தவறியிருந்தனர்.

\- - -

**<u>பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மட்டத்தை மேம்படுத்துவதற்குக் கருத்திற்கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

(1) புதிய பாடத்திட்டத்தை முழுமையாகப் படிக்கவும். புதிய பாட விடயங்கள் மீது அதிக கவனத்தைச் செலுத்தவும்.

(2) வினாவைப் பல தடவைகள் வாசித்து, வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடை அளிக்கவும். தேவையில்லாதவற்றை எழுத வேண்டாம்.

(3) புத்தகங்கள், கையேடுகள், கடிதங்கள், நாட்குறிப்புகள் போன்ற இப்பாடத்துடன் சம்பந்தப்பட்டவற்றைப் பயன்படுத்துங்கள்.

(4) அடிப்படைக் கோட்பாடு ரீதியான எண்ணக்கருக்களைச் சரியாக இனங்கண்டு வினாக்களுக்கு விடையளிக்கத் தேவையான திறன்களை வளர்த்துக்கொள்ளுங்கள்.

(5) கையெழுத்தைத் தெளிவாக எழுதுவதுடன் வினாக்களுக்கும் சரியாக இலக்கமிடுங்கள்.

(6) வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதுடன் கணித்தல்கள் மற்றும் செய்முறை வேலைகள் ஆகியவற்றையும் காட்டுங்கள்.

(7) அதிகளவு கடந்தகால வினாப்பத்திரங்களில் பயிற்சி பெறுவதன் மூலம் அறிவை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

(8) உங்கள் நேரத்தை வினைத்திறனான வகையில் பயன்படுத்துங்கள்.

(9) விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன், வினா இலக்கங்கள் போன்றவை சரியாக எழுதப்பட்டுள்ளனவா என்பதைப் பரீட்சியுங்கள்.

(10) நல்ல முன்னாயத்தத்துடனும் பரீட்சையில் சித்தியடையும் மிகுந்த எதிர்பார்ப்புடனும் பரீட்சைக்கு முகங்கொடுங்கள்.

\- * * * -